**(சார்பு நீதிமன்றம்), பரமத்தி**

**ஓ.எஸ்.எண்.113/2022** **நாள். 24.06.2026**

2026–ம் ஆண்டு ஜுன் திங்கள் 24–ம் நாள் பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

**பி.வா.சா.1 ரேவதி க/பெ.சீனிவாசன்**

**குறுக்குவிசாரணை**

1) வாதி என்ன பரிகாரம்கோரி வழக்கு தாக்கல்செய்துள்ளார் என்றால், என் கணவர் ரூ.9 இலட்சம் கடன் பெற்றதாக சொல்லி வழக்கு தாக்கல் செய்துள்ளார். இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வாதி எங்களுக்கு அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி எனது மாமியார் ஆவார், 3, 4 பிரதிவாதிகள் எனது மக்கள் ஆவார். வாதி கொடுத்த அறிவிப்பிற்கு நாங்கள் மட்டும் பதில் அறிவிப்பு கொடுத்தேன். என் மாமியார் பதில் அறிவிப்பு கொடுக்கவில்லை. பதில் அறிவிப்பிற்கு யார் விபரங்கள் சொன்னார்கள் என்றால், நான் தான் விபரம் சொன்னேன். மேற்படி பதில் அறிவிப்பில் என் கணவர் புரோநோட்டு எழுதி கொடுத்து இருந்தால் அதனுடைய நகலை அனுப்புமாறு தெரிவித்து இருந்தேன்.

2) மேற்படி பதில் அறிவிப்பில் வேறு காரணங்கள் குறிப்பிட்டுள்ளேனா என்றால், புரோநோட்டில் உள்ள கையெழுத்து என்னுடை கண வருடையது இல்லை என்றும், என் கணவர் புரோநோட்டு எழுதிக்கொடுக்கவில்லை என்றும், என் கணவர் கடன் பெறவில்லை என்றும் சொல்லி இருந்தேன். வேறு காரணங்கள் சொல்லவில்லை. என் கணவர் எழுதிய புரோநோட் நகலை வாதி அனுப்பினாரா என்றால், புரோநோட்டின் நகலை வாதி அனுப்பி இருந்தார். புரோநோட்டின் நகலை பெற்று பதில் அறிவிப்பு கொடுத்தோம். எந்த தேதியில் பதில் அறிவிப்பு கொடுத்தோம் என்றால், தேதி ஞாபகம் இல்லை. புரோநோட்டின் நகலை வாங்கி

பார்த்துவிட்டு அது உண்மை என்பதால் தான் நான் பதில் அறிவிப்பு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியான என் மாமியாருக்கும், எனக்கும் எந்த முரண்பாடும் இல்லை. நல்ல பேச்சுவார்த்தையில் உள்ளோம்.

3) 1ம் பிரதிவாதி, வாதியின் அறிவிப்பை பெற்றுக்கொண்டு எந்த பதில் அறிவிப்பும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். புரோநோட் நகலை நான் பெற்றுக்கொண்டு பணம் செலுத்தாததால் தான் வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் எத்தனை முறை எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளேன் என்றால், ஞாபகம் இல்லை. முதலில் எனது மைனர் மக்கள் 2, 3 பிரதிவாதிகளுக்காக நான் ஆஜராகவில்லை என்றால் சரியல்ல. 2, 3 பிரதிவாதிகளுக்காக நான் ஆஜராகவில்லை என்பதால் நீதிமன்றம் காப்பாளர் நியமிக்கப்பட்டு பின்னர் நான் அதை ரத்து செய்ய மனு தாக்கல் செய்தேன். அதன் பின்னர் தான் 2,3 பிரதிவாதிகளுக்காக ஆஜரானேன் சரியல்ல.

4) நான் முதலில் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் என் கணவரின் கையெழுத்து போர்ஜரியாக போடப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டேன் என்றால் சரிதான். புரோநோட்டில் உள்ள கையெழுத்து என்னுடைய கண வருடையது என்று நிருபிக்க கையெழுத்து நிபுணருக்கு அனுப்பப்பட்டது என்றால் சரிதான். கையெழுத்து நிபுணரின் அறிக்கையில் புரோநோட்டில் உள்ள கையெழுத்து என் கணவருடையது தான் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதி அனுப்பிய ரீஜாய்ண்டர் அறிவிப்பு சங்கதிகளை நான் என்னுடைய எதிர்வழக்குரையில் மறுக்கவில்லை என்றால் சரியல்ல. வாதி அனுப்பிய ரீஜாய்ண்டர் அறிவிப்பு சங்கதிகள் உண்மையானது என்பதாலும், அதனுடன் அனுப்பிய புரோநோட்டு உண்மை என்பதாலும், நான் என்னுடைய எதிர்வழக்குரையில் மறுக்கவில்லை என்றால் சரியல்ல

5) மேற்படி கையெழுத்து நிபுணரின் அறிக்கை வந்த பிறகு வழக்கில் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்தேன்.அந்த கூடுதல் எதிர்வழக்குரையில் வாதி

சீட்டு நடத்தி வந்ததாகவும், அதில் என் கணவர் வெற்றுபுரோநோட்டில் கையெழுத்து போட்டு கொடுத்தாகவும், அந்த புநோநோட்டை பயன்படுத்தி வாதி வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் சொல்லியுள்ளேன். மேற்படி விபரங்கள் சீட்டில் உறுப்பினராக இருந்த ரஞ்சித்குமார் என்பவர் மூலம் தெரிந்து கொண்டேன். மேற்படி கூடுதல் எதிர்வழக்குரையில் ரஞ்சித்குமார் மூலமாக மேற்படி விபரங்களை தெரிந்து கொண்டதாக சொல்லவில்லை.

6) வாதி எந்தவிதமான சீட்டு நடத்தவில்லை என்றாலும், என் கண வர் எழுதிக்கொடுத்த புரோநோட்டின் படி தான் வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள கூடுதல் எதிர்வழக்குரைக்கு வாதி மறுப்பு தெரிவித்துள்ளாரா என்று எனக்கு தெரியாது. 23.01.2022ம் தேதி வாதி செல்வராஜ்–யிடம் என் கணவர் ரூ.9 இலட்சம் கடனாக பெற்றுக்கொண்டு சாட்சிகள் பழனியப்பன், குமரவேல் ஆகியோர்கள் முன்னிலையில் தாவா புரோநோட்டு எழுதிக்கொடுத்தார் என்றால் சரியல்ல.

7) தாவா புரோநோட்டின் அசலை நான் நீதிமன்றத்தில் பெற்று பார்க்கவில்லை. என் கணவர் கடன் பெற்றுக்கொண்டு மேற்படி கடனுக்கு ரூ.100க்கு மாதம் ஒன்று ரூ.1 வட்டி செலுத்துவதாக தாவா புரோநோட் எழுதிக்கொடுத்தார் என்றால் சரியல்ல. என் கண வர் 27.06.2022ம் தேதியில் இறந்துவிட்டார். என் கணவர் உயிருடன் இருக்கும் வரை ஏப்ரல் –2022 வரை மேற்படி கடனுக்கு வட்டி செலுத்தி வந்தார் என்றால் சரியல்ல. மே–2022 முதல் மேற்படி கடனுக்கு வட்டி செலுத்தவில்லை என்றால் சரியல்ல. கடனை பெறவில்லை. என் கணவர் இறந்த பிறகு என்னையும், 1ம் பிரதிவாதியையும் சந்தித்து அசலையும், மே–2022 முதல் கடனுக்கான வட்டியை கேட்டார் என்றாலும், நாங்கள் அசலையும், வட்டியையும் தராததால் தான் வாதி அறிவிப்பு அனுப்பினார் என்றாலும் சரியல்ல.

8) நான் தாக்கல் செய்துள்ள கூடுதல் எதிர்வழக்குரையில் வாதி மாட்டுப்பண்ணை வைத்திருந்ததாக சொல்லியுள்ளது என்பது தவறு என்றால்

சரியல்ல. வாதி தங்களது குடும்ப செலவிற்காக ஒரு பசு மாடு, ஒரு எருமை மாடு வைத்திருந்தார் என்றாலும், அவருடைய வீட்டு செலவிற்கு போக மீதமுள்ள பாலை என் கணவர் வாங்கி வந்தார் என்றாலும் சரியல்ல. என் கணவர் பால் வியாபாரம் செய்து வந்தார். வாதியும், வாதியின் மனையிம் எந்த சீட்டு தொழில் செய்யவில்லை என்றாலும், என் கணவர் தான் சீட்டு தொழில் செய்து வந்தார் என்றாலும் சரியல்ல.

9) என் கணவர் சீட்டில் உறுப்பினராக இருந்தார். அந்த சீட்டில் எத்தனை பேர் உறுப்பினராக இருந்தார்கள் என்று எனக்கு தெரியாது. வாதியின் ரீஜாய்ண்டர் அறிவிப்பிலும், Reply statement–லும் சீட்டில் எத்தனை பேர் உறுப்பினராக இருந்தார்கள் என்று சொல்லியுள்ளது பற்றி எனக்கு தெரியாது. என் கணவர் நடத்தி வந்த சீட்டில் 11 நபர்கள் உறுப்பினர்களாக இருந்தார்கள் என்றால், என் கணவ ர் சீட்டு நடத்தவில்லை. சீட்டு எவ்வாறு நடந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது. என் கணவர் இறக்கும் வரை 6 சீட்டு எங்கள் வீட்டில் நடந்தது என்றால் சரியல்ல. மேற்படி சீட்டு தொகை எடுப்பவர்களிடமிருந்து பின்னிட்டு செலுத்தவேண்டிய தொகைக்காக மட்டும் சீட்டு எடுத்தவர்களிடம் பூர்த்தி செய்யப் டப்ட புரோநோட்டுகள் வாங்குவதும் வழக்கம் என்றாலும், நான் சொல்வது போல் பூர்த்தி செய்யப்படாத புரோநோட்டில் கையெழுத்து பெறப்படுவது இல்லை என்றால் சரியல்ல.

10) என் கணவர் இறந்த பிறகு நான் கேட்டுகொண்டதற்கிணங்க பிள்ளைகளத்தூரில் உள்ள குணசேகரன் வீட்டில் மீதி சீட்டுகள் நடந்தது என்றால் சரியல்ல. மேற்படி சீட்டிற்கும், தாவா புரோநோட்டிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. என்னுடைய எதிர்வழக்குரையில் சொத்துக்களை விற்று வாதியிடம் ரூ.19இலட்சம் கொடுத்து இருந்தார் என்றும், அதை ஏமாற்றுவதற்காக தான் வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் கூறியுள்ள நிலையில் மேற்படி ரூ.19இலட்சத்தை வாதியிடமிருந்து

திருப்பி பெற நடவடிக்கை எடுத்தேனா என்றால், அதற்கான ஆதாரம் இல்லாததால் நடவடிக்கை எடுக்கவில்லை. நான் சொல்வது போல் என் கணவரிடமிருந்து பணம் எதுவும் பெறவில்லை என்றாலும், என் கணவர் தான் தாவா புரோநோட்டின் பேரில் வாதியிடம் கடன் பெற்றார் என்றாலும் சரியல்ல.

11) வாதியின் மனைவி பெயர் சுதா ஆகும். என் கணவரின் சகோதரி பெயர் கௌதமி ஆகும். என் கணவரின் சகோதரியும், வாதியின் மனைவியும் ஒன்று சேர்ந்து கொண்டு என் சொத்துக்களை அபகரிப்பதற்காக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதாக சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த எதிர்வழக்குரை மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் என் கணவர் வாதி நடத்தி வந்த சீட்டில் உறுப்பினராக இருந்ததாக தெரிய வருகிறது என்றும், புரோநோட்டை தற்போது வாதி பெயரில் நிரப்பி பூர்த்தி செய்து இத்தாவா தாக்கல் செய்துள்ளதாக பிரதிவாதிக்க தெரியவருகிறது என்று அனுமானத்தின் பேரில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. என் கணவர் புரோநோட்டின் பேரில் வாதியிடம் பெற்ற கடனை ஏமாற்றுவதற்காக வழக்கை நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. நான் பொய்யாக வழக்கை நடத்தி வருவதால், மனு மற்றும் எதிர்வழக்குரை தாக்கல் செய்து வாதிக்கு நஷ்டத்தை ஏற்படுத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in the open Court and read over to the witness and acknowledged by him /her to be Correct.

S NALINAKUMAR

Digitally signed by S NALINAKUMAR
Date: 2026.06.24 18:10:40 +0530

Sub Judge,
Paramathy